

தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா, நெசவாளர் கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் குறித்து மதுரையில் தென் மண்டல அளவில் நெசவாளர் அணி மாநில தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற நெசவாளர் அணி நிர்வாகிகள் கூட்டம் மாநில நிர்வாகிகள் ஓ.ஏ.நாகலிங்கம், சச்சிதானந்தம், காஞ்சி அன்பழகன், பரணி கே.மணி, ஜி.வி.மணிமாறன், ஆ.ராமசாமி, மு. கோவிந்தசாமி, பழனிச்சாமி, நெல்லை பெருமாள், வசந்தம் ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றதில் கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றிய போது எடுத்த படம். உடன் மதுரை மாநகர அமைப்பாளர் வெள்ளைத்துரை, மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட அமைப்பாளர்கள் வினோத், உலகநாத பாண்டியன் மற்றும் நெசவாளர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட திரளானோர் உள்ளனர்

## தலைமைத் தீர்மானக்குழு சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா –

# நூல்கள் வழங்கும் நிகழ்ச்சி! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழாப் பேருரை!

### தலைமை: கவிஞர் தமிழ்தாசன்! அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - மா.சுப்பிரமணியன் - கழக முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, நவ.5-

கழக தலைமைத் தீர்மானக்குழு சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா - நூல்கள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (5-11-2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

விழாவிற்கு தீர்மானக் குழுச் செயலாளர்கள் மீ.அ.வைத்தியலிங்கம், கீரை எம்.எஸ். விசுவநாதன், அக்ரி கே.பி.டி. கணேசன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

தீர்மானக்குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமை வகிக்கிறார்.

தீர்மானக்குழுத் துணைத் தலைவர்கள் டாக்டர் இரா.மாசிலாமணி, பார். இளங்கோவன், சுப.த.திவாகரன், தீர்மானக்குழு இணைச் செயலாளர்கள் மு.முத்துசாமி, பி.நாச்சிமுத்து, வ. சத்தியமூர்த்தி, எம்.ஜெயக்குமார், தீர்மானக்குழு உறுப்பினர்கள் க.வேங்கடபதி, ச.தங்கவேல், மிசா சி.ராமநாதன், ஆர்.சேதுநாதன், ஆதி. சங்கர், டி.டி. ரெஜினால்ட், எம்.வி. வெற்றிச்செல்வன், ப.ஆ. சரவணன், மு.இரா. செல்வராஜ், ஆ.நாச்சிமுத்து, எம்.வீரகோபால், என்.வி. காமராஜ், ப.நீலகண்டன், ஜி.ஏ.அதிபதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு நூல்கள் வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்.

மேலும் இவ்விழாவில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தயாநிதி மாறன் எம்.பி., தலைமைக் கழகச் செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மேயர் பிரியாராஜன், துணை மேயர் சைதை மு.மகேஷ் குமார், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா நன்றி கூறுகிறார்.

## கூட்டுறவுத் துறையில்

# நடப்பாண்டில் ரூபாய் 15 ஆயிரம் கோடி கடன் வழங்கப்படும்!

### அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தகவல்!

சிவகங்கை, நவ. 5-

சிவகங்கை மாவட்டம் கல்லல் ஒன்றியம் தளக்காவூர் ஊராட்சி கிராம சபை கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. தளக்காவூர் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி ம.தமிழ்ச்செல்வி வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது:-

முன்பு ஒரு ஆண்டிற்கு நான்கு முறை கிராமசபை கூட்டம் நடைபெற்றது. தமிழக முதல்வராக கழக தலைவர் தளபதி அவர்கள் பொறுப்பேற்றவுடன் வருடத்திற்கு ஆறு முறை கிராமசபை கூட்டம் நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டார் அதில் மார்ச் 22 உலக தண்ணீர் தினமும் நவம்பர் 1 உள்ளாட்சி தினமும் ஆகும். கிராம சபை கூட்டம் நடைபெறுவதால் கிராம மக்களின் கோரிக்கைகளை நேரடியாக கேட்கமுடியும். அவர்களின்தேவைகள் அங்கு நடைபெற்ற பணிகள் குறித்து நேரில் ஆய்வு செய்ய முடிகிறது. இதனால் கிராம நிர்வாகம் ஆரோக்கியமாக நடைபெற வாய்ப்புள்ளது.

இங்கு இந்த கூட்டத்தில் விளையாட்டு திடலும் தண்ணீர் வசதி கேட்டார்கள். விளையாட்டு மைதானம் இடம் தேர்வு செய்ததும் விளையாட்டு திடல் கட்டித் தரப்படும்.குடிநீர் வசதி ஜல்ஜிவன் திட்டத்தின் கீழ் விரைவில் செய்து தரப்படும் . பள்ளியில் கூடுதல் வகுப்புகளுக்கு முயற்சி எடுக்கப்படும். உள்ளாட்சி பொறுப்பு ஏற்றவர்கள் பொது மக்களின் பணி செய்வதற்காக அக்கறையுடன் பணியாற்ற வேண்டும். அப்பொழுதுதான் அரசின் திட்டங்களை நிறைவேற்ற முடியும் .மகாத்மா காந்தி கிராமங்கள் நாட்டின் முதுகெலும்பு என்று கூறினார்.

அதை நிறைவேற்றும் வகையில் தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதல்வராக இருந்த போது கிராமங்களின் வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களை நிறை வேற்றி செயல்படுத்தினார். தலைவர் கலைஞர் ஆட்சியில் தான் கிராம மக்களும் நல்ல சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்பெறவேண்டும் என்பதற்காக கூட்டுக்குடிநீர் திட்டத்தை கொண்டு வந்தார். அதே வழியில் முதல்வர் தளபதி அவர்களும் கிராமங்களுக்கு அடிப்படை தேவைகளை செய்து தர வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

நகரங்களுக்கு இணையாக கிராமங்கள் உருவாக வேண்டும். கிராமங்கள் வளர்ச்சி பெற வேண்டும் என்று முதல்வர் விரும்புகிறார். இதனால் நகரில் நெரிசல்கள் குறையும். கிராமங்கல் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறும் .கிராமங்களில் பணப்புழக்கமும் அதிகரிக்கும். அரசின் திட்டங்களை மக்கள் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும். அந்த திட்டங் களை தெரிந்து கொண்டு அதன் பயனை பெறும் வகையில் மக்கள் அதிகாரிகளை அணுகிட வேண்டும்.கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கிடைக்காமல் மீண்டும் மனு செய்தவர்களின் சீராய்வு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டுருகிறது.தகுதி உள்ள அனைவருக்கும்பணம் கிடைக்கும். இதுவும் ஒரு பொருளாதார வளர்ச்சிக்கு வழியாகும்.

கூட்டுறவு துறையின் சார்பில் பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு வருகின்றது. 2023 ஆம் ஆண்டில் 5 கோடியே 14 லட்சத்தில் பல்வேறு உதவிகள் செய்யப்பட்டது. இதில் கால்நடை பராமரிப்பு பயிரிடுவதற்கான கடன்கள், சுய மகளிர் கடன் உட்பட பல்வேறு கடன்கள் அடங்கும். எனவே விவசாயிகளும் பொதுமக்களும் கடனை பெற்று உரிய நேரத்தில் கடனை திருப்பி செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் தொடர்ந்து கடன் பெற்று வாழ்க்கையில் முன்னேற முடியும். மாநிலத்தில் ஐந்து பவுன் நகை குறைவாக வைத்து இருந்தவர்களுக்கு 2 கோடியே 27 லட்சத்து 52 ஆயிரம் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. சென்ற 2023ம் ஆண்டு கூட்டுறவுத் துறை சார்பில் ரூபாய் 13 ஆயிரம்கோடி கடன் வழங்க திட்டமிடப்பட்டது.ஆனால் ரூபாய் 14ஆயிரம் கடன் கூடுதலாக வழங்கப்பட்டது.இந்த ஆண்டு ரூபாய் 15ஆயிரம் கோடி கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் இதைவிட கூடுதலாக கடன் வழங்கப் படும்.

அரசின் திட்டங்களை திருப்பத்தூர் தொகுதியில் முழு அளவில் நிறைவேற்ற விரும்புகிறேன் தொடர்ந்து என்னை நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெறவைத்ததற்காக நன்றிக் கடன் ஆகும். ஒரு மாநிலம் முன்னேற வேண்டுமானால் கிராமம் முன்னேறவேண்டும். அதனைத்தொடர்ந்து நகரங்கள் முன்னேறவேண்டும். அப்பொழுதுதான் ஒரு நாடு முழுமையாக முன்னேற்றம் அடையும். அண்ணல்காந்தி கண்ட கனவை தலைவர் கலைஞர் வழியில் செயல்படும் முதல்வர் தளபதி அவர்களுக்கு உங்களது ஆதரவினை தொடர்ந்து நல்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பெரியகருப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் சிறப்பாக பணிபுரிந்த தூய்மைப்பணி யாளர்களை பாராட்டி கேடயம் வழங்கினார்.கூட்டுற வுத்துறை சார்பில் கடன் உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் திட்ட இயக்குனர் ராம்.சிவராமன், கோட்டாட்சியர் எஸ்.பால்துரை, மண்டல கூட்டுறவு துணைப்பதிவாளர் திருமதி ஜுனு, கல்லல் ஒன்றியக் குழு தலைவர் சொர்ணம் அசோகன், மாவட்ட கவுன்சிலர் மஞ்சரி லட்சுமணன், ஆணையாளர்கள் சுந்தரம், செழியன், மாவட்ட ஊராட்சிக் குழு துணைத்தலைவர் திருமதி சரஸ்வதிகருணாநிதி வட்டாட்சியர் தங்கமணி, மாவட்டதுணைசெயலாளர் திருமதி ஜோன்ஸ்ருசோ, ஒன்றிய செயலாளர்கள் குன்னக்குடி சுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன், நாகனி ரவி, கே.ஆர்.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் கரு.அசோகன், பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், இலக்கிய அணி அழகையா, சேவியர், முருகப்பன் ஆதிதிராவிடர் நலக்குழு துணைஅமைப்பாளர் சிதம்பரம் உட்படசுற்றுப்புற கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

முடிவில் ஊராட்சிகள் உதவி இயக்குனர் எஸ்.குமார் நன்றிகூறினார்.



புதூர் ஊராட்சி ஒன்றியம்,கே.துரைசாமிபுரத்தைச் சேர்ந்த தி.மு.க. கிளைச்செயலாளர் ராமமூர்த்தி (எ) செல்வராஜ் அவர்களது மனைவி திருமதி.அமுதமலர் (35) அவர்கள் மின்னல் தாக்கி உயிரிழந்ததை அடுத்து முதலமைச்சரின் பேரிடர் மேலாண்மை நிதி ரூ.4லட்சம் அடங்கிய காசோலையை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் திருமதி. கீதாஜீவன், ஜி.வி.மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. ஆகியோர் குடும்பத்தாருக்கு வழங்கி ஆறுதல் கூறினார்கள்.

# ஜார்க்கண்டில் கொலை செய்யப்பட்ட நாமக்கல் மாணவர் உடலுக்கு அஞ்சலி!

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் செலுத்தினார்!

நாமக்கல், நவ. 5 -

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மாணிக்கம்பாளையம் குறுவட்டம், புத்தூர் கீழ்முகம் கிராமம் வேலகவுண்டம் பட்டியைச் சேர்ந்த மதியழகன், பூங்கொடி தம்பதியரின் மகன் மதன்குமார். இவர் +2 பொதுத் தேர்வில் 1168 மதிப்பெண் பெற்றுள்ளார். 2014ஆம் ஆண்டில் MIT (சென்னை) கல்லூரியில் மெக்கானிக்கல் இஞ்ஜியினர் 6 மாதம் பயின்று பின் பொறியியல் படிப்பு நாட்டமின்றி 2015ம் ஆண்டு முதல் 2020ம் ஆண்டு வரை தாகூர் மெடிக்கல் காலேஜ் சென்னையில் 5 ஆண்டு மருத்துவப் படிப்பினை முடித்துள்ளார்.

2020 முதல் 2022 கோவிட் காலத்தில் வேலவன் மருத்துவமனை திருச்செங்கோடு என்ற மருத்துவமனையில் 2 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். 2022 ஆம் ஆண்டு PG நீட் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று மருத்துவ மேல்படிப்பிற்காக ஜார்கண்ட மாநிலத்தில் உள்ள ராஞ்சி RIMS (Rajendra Instutite of medical science) மருத்துவக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு தடயவியல் மருத்துவ நிபுணர் சம்பந்தமான படிப்பு (Forensic scencic) படித்து வந்த நிலையில் கடந்த 2 ந் தேதி சுமார் 2 மணியளவில் கொலை செய்யப் பட்டு எரிந்த நிலையில் இறந்து கிடந்தார்.

நாமக்கல் நகராட்சி, சேர்ந்தமங்கலம் சாலையில் உள்ள மின் மயானத்தில் மேற்படி இறந்த மாணவர் மதன்குமாரின் இறுதிச் சடங்கு நடைபெற்றது.

வனத்துறை அமைச்சர் மருத்துவர்மா.மதிவேந்தன், நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினருமான எஸ்.எம். மதுரா செந்தில், எலச்சிபாளையம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் எம். தங்கவேல் ஆகியோர் இறந்த மாணவர் மதன்குமாரின் உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தி, அவரது பெற்றோருக்கு ஆறுதல் கூறினர்.



தமிழக முதல்வர், கழக தலைவர் ஆணைக்கிணங்க மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அறிவுறுத்தலின்படியும் , மதுரை மாநகர் மாவட்டம் மத்திய தொகுதிக்கு உட்பட்ட 58 வது வட்டத்தைச் சேர்ந்த ஹோலி ஃபேமிலி பள்ளியில் வாக்காளர் சேமிப்பு முகாம் நடைபெற்றது. புதிய வாக்காளர்களை பொதுக்குழு உறுப்பினர் வைகை எம்.பரமன் தலைமையில் பகுதி கழக செயலாளர் எஸ்.எஸ். மாறன், வட்டக் கழகச் செயலாளர் சீனி ரமேஷ் முன்னிலையில், மாவட்டப் பிரதிநிதி பாண்டி, இளைஞர் அணி செயலாளர் கார்த்திக், பி.எல்.ஏ. 2 துரைமணி, ஜெகநாதன் , குணசேகரன் மற்றும் கழக தோழர்கள் புதிய வாக்காளர்களை சேகரித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மும்பை வி.தேவதாசன்

**நவம்பர் 5 (2019)**



**இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, பின்னர் கழகம் துவக்கப்பட்டபோது, அதில் இணைத்துக் கொண்டதோடு, 1951–ல் மும்பையில் குடியேறி, அம்மாநில கழக முன்னணித் தோழர்களுடன் இணைந்து பணியாற்றியவர்.**

**முதன்முதலாக, தான் வசித்து வந்த பாண்டூப் பகுதியில் கிளைக் கழகத்தைத்துவக்கி, அதன் செயலாளராக பணியாற்றத் தொடங்கி, மும்பை புறநகர் மாநிலக் கழகத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தார்.**

**மும்பையில் திருவள்ளுவர் மன்றம் தொடங்கி, அதன் மூலம் தமிழ் வளரப் பாடுபட்டதோடு, திருவள்ளுவர் சிலையினை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களைக் கொண்டு திறந்து வைத்ததோடு, கலைஞரின் 'குறளோவியத்தை' இந்தி மொழியாக்கம் செய்து வெளியிட்டார்.**


**2018ஆம் ஆண்டு நடந்த முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் 'பெரியார் விருது' பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தீப்பொறி ஆறுமுகம்

**நவம்பர் 5 (2016)**



**சிறிய வயதிலேயே பேச்சாளராகி, கழக மேடைகளில் எந்தக் கருத்தையும் தைரியமாக எடுத்துச் சொல்லி, தமது பேச்சாற்றலால் பெரும் புகழ் பெற்று, தனக்கென்று ஒரு ரசிகர் பட்டாளத்தையே உருவாக்கிக் கொண்டவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில், மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள், "இவர் தனது பதினைந்தாவது வயதிலேயே தந்தை பெரியார் அவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றி, பெரியாரால் அப்போதே பாராட்டப்பட்டவர். இவருடைய பேச்சைக் கேட்டு பேறறிஞர் அண்ணா அவர்கள்தான் இவருக்கு "தீப்பொறி" என்ற அடைமொழியைக் குறிப்பிட்டு, பின்னர் காலப்போக்கில் "தீப்பொறி" என்றாலே இவரைக் குறிப்பிடும் அளவிற்கு பெயர் பெற்று விட்டார்" என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**